2020-ம் வருடம் ஜீலை மாதம் 27-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1.இந்நகராட்சியில் 2018-2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.1,19,505/-ஐ உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு செலுத்த கோரி உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை வேலூர் அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்த அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u> அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1011/2017/அ1)
தீர்மான எண்.72:- அனுமதிக்கப்பட்டது.

2. இந்நகராட்சிக்கு தேவையான சொத்துவரி குடிநீர் கட்டணம், தொழில் வரி, மற்றும் வரியில்லா இனங்களின் வரி செலுத்தும் கணினி இரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள், பதிவேடுகள், இருப்பில் A4 Paper மற்றும் Tonner-கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் விட், வேலூர் (Napco Ltd Vellore) அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.5.00இலட்சத்திற்க்கும், மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.433/பி3/2018.
தீர்மான எண்.73:-அனுமதிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு 2020-2021-ம் ஆண்டிற்கு தேவையான மளிகைப்பொருட்கள், அரிசி, பால், காய்கறிகள், சமையல் எரிவாயு உருளைகள் வாங்குதல், பில் புத்தகங்கள் அச்சடித்தல், மகளிர் சுயஉதவி குழுவினருக்கு மாத ஊதியம் வழங்குதல் மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்கள் ஆகியவற்றை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவின தொகை ரூ.40.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.நாற்பது இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழய்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.சி2/1667/2014
தீர்மான எண்.74:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பணிக்கு 15.07.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கஸ்பா.அ நகராட்சி ஆரம்பப்பள்ளியில் உள்ள கழிவறையில் தரை சீரமைத்தல், மேல் மாடி கட்டிடத்தில் டைல்ஸ் உடைந்துள்ளதை மாற்றி அமைத்தல்,கதவுகள் சீரமைத்தல் மற்றும் அப்பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில் உள்ள சமையலறை சீரமைப்பு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 5.00 | 1.ஜி.பிரபாகரன்<br>2. எம்.தீனதயாளன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:-மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஜி.பிரபாகரன் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.844/இ1/2020

தீர்மான எண்.75:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 22.07.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான தார்வழி பகுதியில் உள்ள நகராட்சி உரகிடங்கில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரகிடங்கில் கூடுதலாக Shredder Machine மற்றும் Belt Conveyor சப்ளை செய்து பொருத்துதல் | 6.75 | 1.எம்.தீனதயாளன்<br>2.ஜி.பிரபாகரன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஜலால் ரோடில் உள்ள பிரதான மழைநீர் வடிகால்வாயில் மோட்டுக்கொல்லை பகுதி அருகே ஒரு பகுதி சேதமடைந்துள்ளதை அகற்றி புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல். | 5.00 | 1. ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.25% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி பிரிவில் பேட்டரி அறையில் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் வருவாய் பிரிவில் கம்யூட்டர் மற்றும் பிரிண்டர்கள் வைக்க மர டேபிள் அமைத்து மின்வசதி செய்தல். | 4.50 | 1.எம்.தீனதயாளன்<br><br>2.ஜி.பிரபாகரன் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:
அ. வரிசை எண்.1 மற்றும் 3-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ஆ.வரிசை எணி.2-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஜி.பிரபாகரன் கொடுத்துள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.843/இ1/2020
தீர்மான எண்.76:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பருவமழை காரணமாக கழிவுநீர் கால்வாய்கள் நீர் தேங்காதப்படி முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக வார்டு எண் 1 ஜலால் ரோடு ஜட்ஜ் மனை, மற்றும் பிற பகுதிகளில் உள்ள கழிவுநீர் கால்வாய்களை JCB மற்றும் டிராக்டர் வாடகைக்கு அமர்த்தும் பணிக்கு தீர்மானம் எண்.54.நாள்.24.06.2020ல் தோரய செலவினாத் தொகை ரூ.5.00 லட்சம் மட்டும் அங்கிகரிக்கப்பட்டதை தொடர்ந்து 01.07.2020ம் தேதியான்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.G.பிரபாகரன், காஸ்பா பி, ஆம்பூர்<br>JCB 1மணி நேரத்திற்கு வாடகை<br><br>டிராக்டர் 1நாள் வாடகைக்கு | ரூ.940/-<br><br>ரூ.4100/- |
| 2 | PSP Trafers M.C ரோடு, ஆம்பூர்<br>JCB 1மணி நேரத்திற்கு வாடகை<br>டிராக்டர் 1நாள் வாடகைக்கு | ரூ.950/-<br><br>ரூ.4200/- |

அலுவலக குறிப்ப:-

(அ) மேற்குறிப்பிட்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.G.பிரபாகரன் அன்னை ராமபாய் தெரு, ஆம்பூர் அவர்களின் விலைப்புள்ளியை அங்கிகாரம் வழங்கலாம்.

(ஆ )அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வரிசை எண்1ல் குறிப்பிட்டுள்ள நபருக்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு அங்கிகாரம் வழங்கலாம்.

ந.க.எண்:873/எச்1/2020

தீர்மான எண்.77:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்கள்ளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட ஆரடவஊைடிடடிரச நோட்டீஸ்கள் அச்சாடித்து வழங்கும் பணியை மேற்கொள்வதற்கு 13.07.2020ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாருதி பிரிண்டர்ஸ்<br>பார்த்தசாரதி தெரு<br>ஜோலார்பேட்டை | Multi Colour நோட்டீஸ்<br>10000X ரு.3.40 | 34000/- |
| 2 | திருமகள் பிரிண்டர்ஸ் முனுசாமி தெரு ஜோலார்பேட்டை | Multi Colour நோட்டீஸ்<br>10000 X ரு.4.00 | 40000/- |
| 3 | திருமலை பிரிண்டர்ஸ் M.M.M ரொட்டி தெரு ஜோலார்பேட்டை | Multi Colour நோட்டீஸ்<br>10000 X ரு.4.50 | 45000/- |

அலுவலககுறிப்பு

(அ) மேற்குறிப்பிட்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மாருதி பிரிண்டர்ஸ், ஜோலார்பேட்டை அவர்களின் விலைப்புள்ளியை அங்கிகாரம் வழங்கலாம்.

(ஆ)அவசரம் அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய மாருதி பிரிண்டர்ஸ் ஜோலார்பேட்டை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு அங்கிகாரம் வழங்கலாம்.

(இ)மேற்படி பணிக்கு ஆகும் செலவினாத்தொகையினை வருவாய்நிதியிலிருந்து வழங்க அங்கிகாரம் வழங்கலாம்.

ந.க.எண்:874/எச்1/2020

தீர்மான எண்.78:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. அரசு அலுவலகத்தில் பணிப்புரியும் ஊர்த்தி ஓட்டுநர்களுக்கு 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவது போல் அனைத்து நகராட்சிகளில் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஊர்த்தி ஓட்டுநர்களுக்கும் தங்கப்பதக்கம் வழங்குவது குறித்து (i)அரசாணை(நிலை)எண்.258 ப.ம.நீ.சீ/துறை நாள்.01.08.1992 (ii) அரசாணை(நிலை)எண்.204 ப.ம.நீ.சீ/துறை நாள்.21.06.1996 (iii) அரசாணை(நிலை)எண்.238 நிதி மற்றும் கு.வ(மாநபு)/துறை நாள்.01.10.1997 ஆகிய அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நகராட்சி

நிர்வாக ஆணையர் சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.4980/2018/அ3 நாள்.10.06.2019 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.6426/2018/அ3 நாள்.24.01.2020ன் படி இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.ஆர்.தமிழரசன் ஓட்டுனர், திரு.சி.ரவிசந்திரன் ஓட்டுனர், மற்றும் திரு.எஸ்.சங்கர் ஓட்டுனர் ஆகிய மூன்று ஓட்டுனர்களுக்கும் தங்கப்பதக்கம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது எனவே மேற்படி அரசணைகளின் வழிக்காட்டு நெறிமுறைகளின் படி தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சி நிறுவனக் கழகம் சென்னை அவர்களின் விலைப்பட்டியலின் படி ஒரு தங்கப்பதக்கத்திற்கான விலை (22 காரட் 4கிராம்) ரூ.24100*3 ரூ.72300/- ரூபாய் எழுபத்தி இரண்டாயிரத்து முன்னூறு மட்டும். மேற்படி செலவினத்திற்கு மன்றம் அங்கிகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- (அ) திரு.ஆர்.தமிழரசன், திரு.சி.ரவிசந்திரன் மற்றும் திரு.எஸ்.சங்கர் ஆகிய மூவருக்கும் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்தமைக்கு ந.நி.ஆ.சென்னை மற்றும் ந.நி.ம.இ அவர்களின் ஆணைப்படி தங்கப்பதக்கம் வழங்கலாம்.
(ஆ) அரசு அங்கிகாரம் பெற்ற தமிழ்நாடு கைவினை பொருட்கள் வளர்ச்சி நிறுவன கழகம் சென்னை அவர்கள் வழங்கிய விலைப்பட்டியலை அங்கிகாரம் வழங்கலாம்.
(இ) மேற்படி செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்கலாம்.
ந.க.எண்.1098/எச்1/2018
தீர்மான எண்.79:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி